# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF THE SUBORDINATE JUDGE, AVINASHI
## OS. No. 3/2022
## PW - 2

| | | | | |
|---|---|---|---|---|
| **Name** | : அப்புச்சாமி | | : | |
| **Father Name** | : மாரப்ப கவுண்டர் | | : | |
| **Village** | : | **Calling** | : | |
| **Taluk** | : | **Age** | : | /2024 |

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 16th day of November 2024.)**

**முதல் விசாரணை**

நான் கீழேரிப்பதி கிராமத்தில் உள்ள சடையன்காட்டு தோட்டத்தில் வசித்து வருகிறேன். இந்த வழக்கில் வாதி மற்றும் பிரதிவாதிகளை தெரியும். எனக்கு இந்த நீதிமன்றத்தில் இருந்து வரப்பெற்ற அழைப்பாணையின் பேரில் நான் இன்று ஆஜராகி சாட்சியம் அளிக்கிறேன். நான் சொட்டக்கவுண்டன்பாளையத்தை சேர்ந்த பொன்னுச்சாமி கவுண்டரிடம் என்னிடம் காட்டப்படும் 01.12.1982-ம் தேதியிட்ட பதிவு கிரைய பத்திரம் வா.சா.ஆ.3 மூலம் 1 1/2 ஏக்கர் சொத்தை கிரையம் பெற்றேன். நான் கிரையம் பெற்ற மேற்படி சொத்தை மலையப்ப கவுண்டர் மகன் விநாயக மூர்த்தி வகையறாவிற்கு கிரையம் கொடுத்து விட்டேன். நான் கிரையம் பெற்று அனுபவித்து வந்த 1 1/2 ஏக்கர் நிலத்தை மட்டும் தான் கிரையம் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.8 கிரைய ஆவணத்தை நானும், என்னுடன் சின்னச்சாமி, பழனிச்சாமி ஆகிய மூவரும் சேர்ந்து தான் விநாயக மூர்த்திக்கு கிரையம் எழுதி கொடுத்தோம். அதில் நான் என்னுடைய 1 1/2 ஏக்கருக்கு மட்டும் கையொப்பம்

செய்தேன், மீதி சொத்திற்கு சின்னசாமியும், பழனிச்சாமியும் கையொப்பம் போட்டார்கள்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

(குறுக்கு விசாரணைக்காக வேண்டி வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது)

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

**Sd/-C.Senthil Kumar**
**Subordinate Judge,**
**Avinashi.**